# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.152/2018

வா.சா.3– குறுக்கு விசாரணை – நாள் 06–03–2026.

பெயர் = விஜயா

வா.சா.–3 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,3,5, 9 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) எனக்கு சாட்சியமளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி நாராயணனின் மனைவி என் உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு கிழக்குப்பக்கம் சின்னச்சாமி வகையறா வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சின்னச்சாமி வகையறா 10 வருடங்களாக அங்கு குடியிருக்கிறார்களா என்றால் 10 வருடத்திற்குள் தான் இருக்கும் என சாட்சி கூறுகிறார். வாதி வீடுகட்டி 5 வருடம் இருக்கும் என வாக்குமூலத்தில் இருக்கும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் வீடுகட்டியுள்ளது தெற்குப்பக்கம் என்றால் சரிதான். வடக்குபக்கம் காலியிடம் உள்ளது என்றால் சரியல்ல. வாசல் உள்ளது என சாட்சி கூறுகிறார். நிரூபணவாக்குமூலத்தில் வடக்குப்பக்கம் பிரதிவாதிகளுக்கு பாதை உள்ளது என சொல்லியுள்ளேன் அது யாருடைய இடம் என்றால் காளிச்சாமி, சின்ராசு ஆகியோர் இடத்திற்கும் வடக்கே பாதை உள்ளது என சாட்சி கூறுகிறார். வாதியின் இடத்திற்கு வடக்குப்பக்கம் தான் பிரதிவாதிகள் பாதையாக பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல.

(2) என் கணவர் பெயர் ராமன், மாமனார் பெயரும் ராமன் என்றால் சரிதான். சர்க்கரையிடமிருந்து வாதி கிரையம் வாங்கிய ஆவணத்தில் என் கணவர் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல அது வேறு நபர். என் கணவர் தான் கையெழுத்து செய்துள்ளார் வழக்கிற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் உயிருடன் இல்லை. வாதி போர்வெல் போட்டுள்ளதாக நான் சொல்லியுள்ள இடம் பிரச்சனைக்குரிய இடமில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நடந்து வரும் பாதையில் போர்வெல் போடவில்லை நான் பொய்யாக

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.03.06 14:34:05 +0530